DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
O.S. No.77 of 2012
Defendant Witness : PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. குணசேகரன் | Caste | : | |
| Fathers Name | : | திரு. ராஜகோபால் | Calling | : | |
| Village | : | செம்புளிவரம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 62 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2025

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.விஸ்வநாத் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு மார்ச் மாதம் செவ்வாய்கிழமை 04ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

இரண்டாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை நேரம் 11.15

1. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பானை எதெனும் வந்ததா என்றால் இல்லை.

2. இந்த நீதிமன்றத்திற்கு சாட்சியம அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் 1ம் வாதி அழைத்து வந்தார். அவர் எனது மருமகள் ஆவார்.

3. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் அதன் பரப்பளவு குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த சர்வே எண் 116 உட்பிரிவு 2. மேற்படி சொத்தின் எல்லைகள் குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதன் எல்லைகள் கிழக்கு பக்கம் ரோடு, மேற்கு பக்கம் பயிர் செய்யும் நிலம், வடக்கு பக்கம் பயிர் செய்யும் நிலம், தெற்கு பக்கம் வழிபாட்டை.

4. பலராம் மற்றும் மாரியம்மாள் அவர்கள் எவ்வளவு நிலத்தில் குடியிருந்து வருகின்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் 10 செண்ட் நிலத்தில் குடியிருந்து வருகின்றார்கள்.

5. மேற்படி நிலத்தில் குடிசைவீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்களா தளம் போட்ட வீட்டில் குடியிருந்து வருகின்றார்களா என்றால் குடிசைவீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள்.

6. எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகின்றார்கள் என்றால் 1980லிருந்து குடியிருந்து வருகின்றார்கள்.

7. 1970 முதல் குடியிருந்து வருகின்றார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல.

8. மாரியம்மாள் மற்றும் பலராம் ஆகியோர்கள் கிரையம் பெற்று தான் வசித்து வருகின்றார்கள் என்றால் சரியல்ல.

9. நான் வசிக்கும் கிராமத்திற்கும் வழக்கு சொத்து உள்ள கிராமத்திற்கு சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 25 கிலோ மீட்டர் இருக்கும்.

10. அவர்கள் கிரையம் பெற்ற விவரம் தங்களுக்கு தெரியாது என்று சொன்னால் தாவா சொத்து உள்ள கிராமம் எனது தாத்தா வசித்து வந்த கிராமம். அதனால் அங்கு சென்று வருவேன்.

11. 1ம் வாதியை எனது மகனுக்கு திருமணம் செய்த பின்னிட்டு தான் அங்கு சென்று வருகின்றென் என்றால் சரியல்ல.

12. நரசிம்மன் என்ற கிராம நிர்வாக அலுவலர் அவர்களை தெரியுமா என்றால் தெரியும். அவர் இந்த வழக்கின் இரண்டாம் வாதிக்கு மாமா உறவுமுறை வேண்டும் என்றால் சரிதான்.

13. நரசிம்மன் என்ற கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் பிரதிவாதிகள் குடியிருந்து வருவதற்கான கிராம் நிர்வாக அலுவலரிடம் கடிதம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

14. கடிதம் கொடுத்த விவரம் அனைத்தும் தெரிந்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல.

15. பிரதிவாதிகளை எந்த ஆண்டு முதல் தாவா சொத்திலிருந்து காலி செய்யுமாறு கூறினார்கள் என்றால் 1990ம் ஆண்டு. மேற்படி காலி செய்யவில்லை என்றால் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் மாரியம்மாள் என்பவர் தனது பிள்ளைகளுக்கு திருமணம் செய்துவிட்டு காலி செய்வேன் என்று கூறினார்.

16. 1990ம் ஆண்டிற்கு முன்பாகவே மாரியம்மாள் என்பவர் அவரது பிள்ளைகளுக்கு திருமணம் செய்துவிட்டார் என்றால் என் அத்தை நாகம்மாள் சொன்ன விவரம் தான் எனக்கு தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

17. பிரதிவாதிகள் தளம்வீடு கட்ட முயற்சி செய்தபோது பஞ்சாயத்தார்கள் சேர்ந்து அதை தடுத்து நிறுத்தினோம் என்றால் சரிதான்.

18. பிரதிவாதிகள் தளம்வீடு கட்ட முயற்சி செய்கின்றார்கள் என்று போலீசாரிடம் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. மேற்படி புகார் யாரால் கொடுக்கப்பட்டது என்றால் தாரகராம் என்பவர் கொடுத்தார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது.

19. புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை கைது செய்துள்ளார்கள் என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது கைது செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான்.

20. எனது அதிகாரத்தை பயன்படுத்தி தான் பிரதிவாதிகள் மீது பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

21. இந்த வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால்இந்த வழக்கினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 11.40